**செய்தி வெளியீடு எண் : 621** **நாள்: 17.04.2022**

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

### தேசிய சீனியர் ஆண்கள் வளைகோல் பந்து சாம்பியன்ஷிப் - 2022 (12th Senior Men's National Hockey Championship - 2022) இறுதிப்போட்டியில் தமிழ்நாடு அணிக்கு வெள்ளிப்பதக்கம்

### மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் வாழ்த்து

---

12ஆவது இந்திய சீனியர் ஆண்கள் வளைகோல் பந்து போட்டிகள் மத்தியப் பிரதேச மாநிலம் போபாலில் கடந்த 6-ஆம் தேதி முதல் நடைபெற்றது. இதில் 27 மாநில அணிகள் கலந்து கொண்டு விளையாடின.

நேற்று (16/04/2022) நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா அணிகள் மோதின. தமிழ்நாடு அணி கர்நாடக அணியை 3 - 0 என்ற கோல் கணக்கில் வென்றது. 22 ஆண்டுகளுக்குப் பின் தமிழ்நாடு அணி இறுதி ஆட்டத்தில் பங்கு பெற்றது குறிப்பிடத்தக்கது.

இன்று (17/04/2022) நடைபெற்ற இறுதிப்போட்டியில் தமிழ்நாடு அணி அரியானா அணியை எதிர் கொண்டு விளையாடியது. இந்தப்

போட்டியில் தமிழ்நாடு அணி மற்றும் அரியானா அணிகள் தலா ஒரு கோல் அடித்து சம நிலையில் இருந்ததால் இறுதியில் டை பிரேக்கர் (TIE BREAKER) நடைபெற்றது. இதில் 4-2 என்ற கோல் கணக்கில் அரியானா அணி வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றியது. தமிழ்நாடு அணி இரண்டாமிடம் பெற்றது. வெள்ளிப்பதக்கம் வென்ற தமிழ்நாடு அணி வீரர்களைப் பாராட்டி மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மேலும் அணியின் வெற்றிக்காக உழைத்த கேப்டன் திரு. ஷியாம் குமார், பயிற்சியாளர் திரு. சார்லஸ் டிக்சன், அணி மேலாளர் திரு. முத்துகுமரன் மற்றும் தமிழ்நாடு ஹாக்கி சங்கத் தலைவர் திரு. சேகர் மனோகரன் ஆகியோருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in